தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 23, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 செப்டம்பர் 8, புதன்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு."

வந்த விருந்தினரை உபசரித்து அவர்களை வழியனுப்பி வைக்கும்போதே, மேலும் வரக்கூடிய விருந்தினரை ஆவலுடன் எதிர்நோக்கி நிற்பவனை, புகழ்வானில் இருப்போர் நல்ல விருந்தினன் என்று வரவேற்றுப் போற்றுவர்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

சீர்மிகு நகரம்

***2758—திருமதி வானதி சீனிவாசன்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணிகளின் விவரங்களை அளிக்க அரசு முன்வருமா?

[2021 செப்டம்பர் 8

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

சீர்மிகு நகரத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, குடிநீர் வழங்கல், பாதாளச் சாக்கடை, திடக் கழிவு மேலாண்மை, தெரு விளக்கு, சாலைகள், பேருந்து நிலைய மேம்பாடு, சந்தை மேம்பாடு, ஆற்று மேம்பாடு, ஏரி புனரமைத்தல், வாகனங்களின் நிறுத்துமிட மேலாண்மை, ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம், மழைநீர் வடிகால் போன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றது. சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் மொத்தம் 599 திட்டங்களுக்கு ரூ.10,538.18 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில், ரூ.10,292.63 கோடி மதிப்பிலான 586 திட்டங்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய 11 மாநகராட்சிகளில் திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்திற்குத்தான் அதிகமான Smart city திட்டங்கள் கொடுக்கப்பட்டு, அதிகமான நிதி, 97 சதவிகித நிதி தமிழக அரசால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த Smart city திட்டத்தில் அடிப்படையான கட்டமைப்பு வசதிகளில் மிக முக்கியமான ஒன்று Multi–level car parking ஆகும். என்னுடைய கோயம்புத்தூர் (தெற்கு) தொகுதியில் உள்ள நெருக்கமான, நெரிசல் மிகுந்த T.K. மார்க்கெட் மற்றும் டவுன்ஹால் பகுதிகளில் Multi–level car parking அமைக்க வேண்டும் என்பது எங்கள் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை ஆகும்.

இரண்டாவதாக, நீர்நிலைகள், குளங்கள் ஆகியவற்றில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், இவைகளையெல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கும் பணிகள் நடைபெறவில்லை. இந்தப் பணிகளெல்லாம் எப்போது நிறைவு பெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையைப் பொறுத்தவரையில்,* Multi–level car parking *அமைக்கும் பணி கிட்டத்தட்ட முடியும் நிலையில் இருக்கிறது. நானும் நேரடியாகச் சென்று பார்த்துவிட்டு வந்தேன். அதேபோன்று அங்குள்ள 10 குளங்களில், 9 குளங்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மேலாண்மைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகளெல்லாம் விரைவில் முடியவிருக்கின்றன. கடந்த ஆட்சியில் கோவை மாநகரில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள், வெள்ளலூர் பேருந்து நிலையம் அமைக்கும் பணியாக இருந்தாலும் சரி,* (மேசையைத் தட்டும் ஒலி) *குடிநீர்த் திட்டப் பணியாக இருந்தாலும் சரி,* (மேசையைத் தட்டும் ஒலி) *அனைத்துத் திட்டங்களும் முறையாகத் தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பணிகளை விரைந்து முடிப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகளெல்லாம் குறிப்பிட்ட காலகட்டத்தில் முடியுமாறு நடவடிக்கை மேற்கொண்டு, அப்பணிகளை விரைவில் முடித்துத் தருமாறு கேட்டுக்கொண்டு, நன்றி கூறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நன்றி சொல்லிவிட்டார்களே! மாண்புமிகு அமைச்சர், சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி என்றால் நன்றிதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லிவிட்டார்கள்.* (சிரிப்பு) *நன்றி சொல்லிவிட்டார்கள் என்று கூறினேன்.*